**தலைப்பு 222 – இலங்கை தரைப்படை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 222 – இலங்கை தரைப்படையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 30 ஆம் திகதி இலங்கை தரைப்படை தளபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

இலங்கை தரைப்படைக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 159,814.90 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 158,351.34 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், இலங்கை தரைப்படைக்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 1,463.56 மில்லியன் அதாவது 0.92 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 151,629.47 | 151,624.69 | 4.78 | 0.003 |
| மூலதனம் | 8,185.43 | 6,726.65 | 1,458.78 | 17.821 |
| மொத்தம் | 159,814.90 | 158,351.34 | 1,463.56 | 0.916 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

இலங்கை தரைப்படைக்குரிய 22201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2,605 | 2,353 | 2,229 | 2,959 | 4,000 | 1,502 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

இலங்கை தரைப்படையின் கீழுள்ள கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 528 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

இலங்கை தரைப்படையின் கீழுள்ள 6000/0000/00/0015/0103/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 138 மில்லியனாக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

இலங்கை தரைப்படையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட

முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பாதீட்டு முரண்கள்

இந்தியக் கடன் உத்தேசத்திட்டத்தின் கீழ் பெறப்பட்டிருந்த கடன் உதவிகளை பயன்படுத்துவதற்காக 04 உப செலவின விடயங்களின் கீழ் ரூபா 2,604.00 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 871.20 மில்லியன் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 1,732.80 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 53 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.2 கட்டுநிதிக் கணக்குகள்

இலங்கை தரைப்படையினால் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 23.40 மில்லியனாக இருந்தது. அதில் ரூபா 2.81 மில்லியன் கூட்டுத்தொகையான மீதி 2008 பெப்ரவரி 18 ஆந் திகதி முதல் கொண்டுவரப்பட்டிருந்தது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்களை விஞ்சிய ரூபா 2.64 மில்லியன் கூட்டுத்தொகையான 165 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 63.91 மில்லியன் தொகை உரிய பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றாது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

22201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்குக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 401.34 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்தக் கடன் மீதியை அறவீடு செய்ய பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

### 3.5 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

இலங்கை தரைப்படையினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்தை விட குறைவான காலமாக கொண்டுவரப்படுகின்ற தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 4,273.94 மில்லியன் ஆகும்.

**3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது நடாத்தப்பட்ட பல்வேறு அரசாங்க, சமய மற்றும் ஏனைய விழாச் செயற்பாடுகளுக்காக ரூபா 8.86 மில்லியன் பெறுமதியான பொருட்கள் எவ்வித அங்கீகாரமுமின்றி இலங்கை தரைப் படையின் 12 ஆவது பொறியியல் சேவை படையணியினால் விநியோகிக்கப்பட்டதாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

இலங்கை தரைப்படையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளுக்குப் புறம்பானவைகள்**

பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) 2014 சனவரி 07 ஆந் திகதி கவர் அவுட்டர்ஸ், டியூப் இனர் மற்றும் 96 மப்லர் செட் என்பவற்றை ரூபா 8.55 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த நிறுவனத்தின் கேள்வி நிராகரிக்கப்பட்டு அதிக விலை சமர்ப்பித்த நிறுவனத்திலிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்திருந்தமையினால் ரூபா 4.59 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

(ii) மேற்கூறப்பட்ட கொள்வனவின் போது 80 அலகுகளும் 16 அலகுகளுமாக இரு தடவைகள் கட்டளையிடப்பட்டிருந்ததுடன் இரண்டு சந்தர்ப்பங்களின் போதும் பொருட்கள் வழங்குதல் முறையே 30 நாட்கள் மற்றும் 180 நாட்களாக தாமதிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்குனரிடமிருந்து அறவிடவேண்டியிருந்த ரூபா 454,701 தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 168,460 பிளாஸ்டிக் கோவைகள் ரூபா 50.00 மில்லியனுக்கு கொள்வனவு செய்தல் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) காகிதாதிகள் வகையின் கீழ்வரும் கோவைகளைக் கொள்வனவு செய்வதற்கான செலவினம் மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அது மூலதன செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) மேற்கூறப்பட்ட கொள்வனவுகளுக்காக கூறுவிலை கோரும் போது ஒரு வழங்குனர் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பித்திருந்ததுடன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 7.12.1 வழிகாட்டியின் பிரகாரம் கிடைத்த கேள்விகள் நிராகரிக்கப்பட்டு மீண்டும் கூறுவிலை கோருவதற்கோ அல்லது 7.12.2 வழிகாட்டியின் பிரகாரம் கிடைத்த கூறுவிலை நியாயமானதா என பரீட்சித்து வழங்குனரை விசாரித்து கூறுவிலையினைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கூறுவிலை சமர்ப்பித்த ஒரேயொரு வழங்குனர் நிறுவனம் தனிநபர் வியாபாரமொன்றாக இருந்ததுடன் கேள்வி சமர்ப்பிக்கும் போதும், கேள்வி கையொப்பமிடும் போதும் மற்றும் பொருட்கள் வழங்கும் போது மற்றும் பட்டியல் சமர்ப்பிக்கும் போதும் நிறுவனத்தின் உரிமையாளராக பல்வேறு நபர்கள் கையொப்படமிட்டிருந்தனர். அதன் பிரகாரம் நிறுவனத்தின் சரியான உரித்தாளரை (வழங்குனர்) இனங்காணுதல் சர்ச்சைக்குரியதாக இருந்தது.

(iv) இலங்கை தரைப்படைக்கு முன்னைய ஆண்டுகளின் போது பொருட்கள் வழங்கும் போதும் பெறுமதி சேர் வரி மோசடி செய்தல் மற்றும் உரிய திகதியில் பொருட்கள் வழங்கத் தவறியிருந்த இரண்டு நிறுவனங்களின் உரிமையாளரினாலும் வேறு நிறுவனமொன்றின் பெயரில் கோவைகள் உறை வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் போதும் அந்த வழங்குனருக்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது.

(v) வழங்குனருடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் 8.2 ஆம் உட்பிரிவின் பிரகாரம் பொருட்கள் வழங்குதல் 30 நாட்களை விட தாமதிக்கும் ஒப்பந்தத்தை நிறுத்துவதற்கும் செயலாற்றல் பிணைமுறியை அரசுடைமையாக்குவதற்கும் காரணமாக அமையும் என காண்பிக்கப்பட்டிருக்கும் போது பொருட்கள் வழங்குவதற்கு 08 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தாமதித்த மேற்கூறப்பட்ட வழங்குனர் தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) வழங்கலுக்காக உடன்படிக்கை கைச்சாத்திட்ட நபர்களின் பெறுமதிசேர் வரி பதிவு இலக்கம் செயற்பாடற்ற இலக்கமாக இருந்தமையும், வழங்குனர் நிறுவனம் பெறுமதி சேர் வரி செலுத்துவதற்காக பதிவு செய்யப்படாதிருந்தமையும் உள்நாட்டு இறைவரி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தும், மேற்கூறப்பட்ட வழங்குனருக்கு ரூபா 5.36 மில்லியன் பெறுமதி சேர் வரியாகச் செலுத்தப்பட்டிருந்தது,

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3 ஆவது வழிகாட்டியின் பிரகாரம், பொருளொன்றை அல்லது சேவையொன்றைக் கொள்வனவு செய்யும் போது அதில் காண்பிக்கப்பட்டுள்ள கொள்வனவு முறைமை பின்பற்றப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அந்த நடைமுறைகளுக்குப் புறம்பாக ரூபா 2.08 மில்லியன் மாதாந்த வாடகைக் கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டிய கட்டிடமொன்று வாடகைக்கு பெறப்பட்டிருந்தது.

### 3.8 முகாமைத்துவ நலிவுகள்

2014 ஆம் ஆண்டில் இலங்கை தரைப்படையின் வருடாந்த கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் சங்கீத உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 24.00 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 20 ஆவது படையணிக்குத் தேவையான சங்கீத உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் ரூபா 36.13 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட கொள்வனவுகள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) சந்தை விலை ஒப்பீட்டு முறைமை பின்பற்றப்பட்டு படையணி நிறுவனத் தலைவரின் நிதியத்திலிருந்து மேற்கூறப்பட்ட சங்கீத உபகரணங்கள் ரூபா 36.13 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பின்னர் அந்தக் கொடுப்பனவுகள் அரசாங்கத்தின் நிதியிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட கொள்வனவுகள் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற வெற்றிவாகை அணிவகுப்பு விழாவிற்காக அவசர தேவையாகக் கருதி மேற்கூறப்பட்ட கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 18 படையணிகள் 2013 ஆம் ஆண்டின் மே மாதத்தின் போது அணிவகுப்பு நடைபெற்ற திகதிக்கு முன்னர் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு தவறியிருந்தது.

(இ) மேற்கூறப்பட்ட பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட சகல பொருட்களும் ஒரு கொள்வனவாக கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாயின் வழங்குனரிடமிருந்து சாதகமான கழிவுடன் கூடிய கொள்வனவுகளைச் செய்யக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மேற்கூறப்பட்ட கொள்வனவுகளின் கீழ் இலங்கை தரைப்படையின் ஆயுதப் படைப் பிரிவிற்குரிய முகத்துவாரம் றொக்ஹவுஸ் முகாமிற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,797,600 பெறுமதியான பொருட்கள், 2015 நவம்பர் 03 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது சங்கீதப் பொருட்கள் களஞ்சியத்தில் பௌதீகரீதியில் காணப்படவில்லை.

(உ) 2013 திசெம்பர் 19 ஆந் திகதி படையணி நிறுவனத் தலைவர் நிதியத்திலிருந்து கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக ரூபா 543,550 தொகையான 03 சோபா செட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர் அரச நிதியத்திலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

**3.9 மனித வள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

இலங்கை தரைப்படையில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் படையினரின் எண்ணிக்கை.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | உத்தியோகத்தர் - நிரந்தரமானது/ தொண்டர் | 10,641 | 9,654 | 987 |
| (ii) | படையினர் - நிரந்தரமானது/ தொண்டர் | 189,719 | 172,307 | 17,412 |
| | மொத்தம் | 200,360 | 181,961 | 18,399 |

இலங்கை தரைப்படையில் சேவையாற்றுகின்ற சிவில் பதவியணியினரின் எண்ணிக்கை

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 09 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 02 | 04 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 198 | 150 | 48 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 6,386 | 9,629 | - | 3,243 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 4,537 | 1,188 | 3,349 | - |
| | மொத்தம் | 11,138 | 10,978 | 3,403 | 3,243 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆட்சேர்க்கப்பட்ட மிகை ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை தரைப்படை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 21,802 வெற்றிடங்கள் காணப்பட்டன. இலங்கை தரைப்படையினால் அந்த வெற்றிடங்களை முறையான பிரகாரம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது 1,188 ஊழியர்கள் அமையப் பதவியணியினராக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.